FORM G

INVITATION FOR EXPRESSION OF INTEREST FOR RAN INDIA STEELS PRIVATE LIMITED (UNDER CIRP) OPERATED IN MANUFACTURING OF STEEL AND STEEL PRODUCTS

(Under sub-regulation (1) of regulation 36A of the Insolvency and Bankruptcy Board of India (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016)

S.No.	RELEVANT PARTICULARS	
1.	Name of the corporate debtor along with PAN & CIN/ LLP No.	Ran India Steels Private Limited CIN: U93090TN1995PTC039896 PAN: AABCR5529D
2.	Address of the registered office	First Floor, New No. 510, Old No.164, T.T.K Road, Alwarpet, Chennai, Tamil Nadu, India, 600018
3.	URL of website	Not Available
4.	Details of place where majority of fixed assets are located	i. RAN INDIA STEELS (P) LTD., UNIT – I S. F. No. 265 / 2 E, Nallur Village, Kavundipalayam (Post), Kandampalayam (Via), Paramathi Velur (T.K), Namakkal (DT) – 637203 ii. RAN INDIA STEELS (P) LTD., UNIT – II S. F. No. 255 / 6A2, Nallur Village, Kavundipalayam (Post), Kandampalayam (Via) Paramathi Velur (T.K), Namakkal (D.T) - 637 203
5.	Installed capacity of main products/ services	**S.No.** / **Products/Service** / **Capacity** i. Rolling Mill (TMT Bars) — 54,000 MTPA ii. Melting (Ingots) — 36,000 MTPA iii. Billet Production Unit — 43,800 MTPA iv. Ingot Production — 3,6000 MTPA
6.	Quantity and value of main products/ services sold in last financial year	Quantity and value of main products/services sold during the last financial year is **NIL.**
7.	Number of employees/ workmen	**NIL** on Insolvency Commencement Date
8.	Further details including last available financial statements (with schedules) of two years, lists of creditors are available at URL:	The details can be obtained by requesting on email: cirp.ranindia@gmail.com
9.	Eligibility for resolution applicants under section 25(2)(h) of the Code is available at URL:	The details can be obtained by requesting on email: cirp.ranindia@gmail.com
10.	Last date for receipt of expression of interest	February 21, 2026
11.	Date of issue of provisional list of prospective resolution applicants	February 25, 2026
12.	Last date for submission of objections to provisional list	March 02, 2026
13.	Date of issue of final list of prospective resolution applicants	March 04, 2026
14.	Date of issue of information memorandum, evaluation matrix and request for resolution plans to prospective resolution applicants	March 04, 2026
15.	Last date for submission of resolution plans	April 04, 2026
16.	Process email id to submit Expression of Interest	cirp.ranindia@gmail.com
17.	Details of the corporate debtor's registration status as MSME	As per the information made available to the RP, the Corporate Debtor is a registered MSME (Medium Enterprise)

Date: February 06, 2026
Place: Karur

For Ran India Steels Private Limited
P Bala Subramanian
Resolution Professional of Ran India Steels Private Limited
IBBI Registration No. IBBI/IPA-001/IP-P-02867/2024
2025/14404
AFA valid up to June 30, 2027
85/3, Sukkaliyur, Karuppampalayam Village,
Karur, Tamil Nadu ,639003

TAMILTH Salem 1 Regional_04 225948 13233979

களப்பயிற்சி: பொறியியல், அறிவியல், மனிதநேயம், மேலாண்மைத் துறையில் படிப்போருக்கு, தலா ரூ.15,000 உதவித்தொகையுடன் சென்னை ஐஐடி களப்பயிற்சி அளிக்கிறது. மார்ச் 2-க்குள் https://internship.iitm.ac.in என்ற இணையத்தில் விண்ணப்பிக்கலாம்.

தபால்நிலைய பணி: தபால் நிலையங்களில் ஏற்பட்டுள்ள காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. 10-ம் வகுப்பு படித்தவர்கள் பிப்ரவரி 16-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். விவரம்: app.indiapost.gov.in/ gdscandidate.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, சேலம் கோட்டை மைதானத்தில் 3–வது நாளாக சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்கள். (2–வது படம்) நாமக்கல் பூங்கா சாலையில் மறியலில் ஈடுபட்ட அங்கன்வாடி பணியாளர்கள். (கடைசி படம்) ஈரோடு காளை மாட்டு சிலை அருகே போராட்டத்தில் ஈடுபட்ட சத்துணவு பணியாளர்கள்.

3-வது நாளாக அங்கன்வாடி ஊழியர்கள் மறியல்

சேலம்/நாமக்கல்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, சேலம், நாமக்கல்லில் நேற்று 3-வது நாளாக அங்கன்வாடி பணியாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சேலம் கோட்டை மைதானத்தில் அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் கூட்டமைப்பு சார்பில் நேற்று 3-வது நாளாக மறியல் போராட்டம் நடந்தது. கூட்டமைப்பின் மாநில துணை தலைவர் சரோஜா தலைமை வகித்தார், மாநில செயலாளர் வைத்தியநாதன் முன்னிலை வகித்தார்.

இதில் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். 5 ஆண்டு பணி முடித்த சமையல் உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்ட 200 பேரை போலீஸார் கைது செய்தனர்.

நாமக்கல்லில்...

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி, நாமக்கல் பூங்கா சாலையில் நேற்று நடந்த 3-வது நாள் போராட்டத்துக்கு தமிழ்மாநில அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்க மாவட்ட செயலாளர் அனுராதா தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் பூங்கொடி, மாநில நிர்வாகி பாண்டிமாதேவி முன்னிலை வகித்தனர்.

இதில் கோஷம் எழுப்பியும், கும்மியடித்தும் பூங்கா சாலை நுழைவாயிலில் மறியலில் ஈடுபட்டனர். அவர்களில் 200-க்கும் மேற்பட்டோரை போலீஸார் கைது செய்து மாலையில் விடுவித்தனர்.

இருசக்கர வாகனங்கள் மீது கார் மோதியதில் 5 பேர் காயம்

மேட்டூர்

சேலம் மாவட்டம் கொளத்தூர் பகுதியில் இருந்து மேட்டூர் நோக்கி அதிகவேகமாக கார் ஒன்று வந்தது. மூலக்காடு அருகே வந்தபோது மேட்டூரிலிருந்து மைசூரு நோக்கிச் சென்ற அரசப் பேருந்து மீது உரசி விட்டு, அடுத்தடுத்து 3 இரு சக்கர வாகனங்கள் மீது மோதியது. இதில் 2 பெண்கள் உட்பட 5 பேர் காயமடைந்தனர். காரை ஓட்டி வந்த இளைஞரை பிடித்து ஓரமாக அமர வைத்தனர்.

தகவலறிந்து வந்த கொளத்தூர் போலீஸார் விசாரணையில் ஈரோடு மாவட்டம் கொமராயனூரைச் சேர்ந்த சரவணன் (28) என்பதும், மதுபோதையில் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியதும் தெரிய வந்தது. மேலும் இவர் வெளிநாட்டில் பணி புரிவதாகவும் போலீஸார் தெரிவித்தனர். இதையடுத்து சரவணன் மீது வழக்குப் பதிந்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

பிப்.8–ல் ஈரோடு, நாமக்கல்லில் குரூப் 2, குரூப் 2ஏ தேர்வு

ஈரோடு/நாமக்கல்

ஈரோட்டில் வரும் 8-ம் தேதி குரூப் 2, 2ஏ முதன்மை எழுத்துத் தேர்வு நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் வரும் 8-ம் தேதி குரூப்–2, குரூப் 2ஏவுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வை ஈரோடு மாவட்டத்தில் 385 பேர் எழுத உள்ளனர்.

ஈரோடு வட்டத்தில் உள்ள 2 மையங்களில் தேர்வு நடைபெற உள்ளது. காலை, மாலை என இரு வேளைகளில் தேர்வு நடைபெறுகிறது. தேர்வு நாளன்று காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை மற்றும் மதியம் 1.30 மணி முதல் 2 மணி வரை தேர்வுக் கூடத்துக்குள் தேர்வர்கள் அனுமதிக்கப்படுவர். இதற்கு மேல் வருகை புரியும் தேர்வர்கள் எக்காரணம் கொண்டும் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள், என தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ பதவிகளுக்கான முதன்மை தேர்வு வரும் 8-ம் தேதி வேட்டாம்பாடி பிஜிபி இன்டர்நேஷனல் பள்ளியில் நடைபெற உள்ளது. இதில் முற்பகல் தேர்வை 283 பேரும், பிற்பகல் தேர்வை 298 பேரும் எழுதுகின்றனர், என ஆட்சியர் துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தர்பூசணியில் செயற்கை ரசாயனம்: வதந்தியை நம்ப வேண்டாம்

சேலம் மாவட்ட ஆட்சியர் தகவல்

சேலம்

சேலம் எடப்பாடி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் தர்பூசணியில் செயற்கை ரசாயனம் செலுத்தவதாக சமூக ஊடகங்கள் மற்றும் தொலைகாட்சியில் வதந்தி பரவுவதை பொதுமக்கள் நம்ப வேண்டாம், என ஆட்சியர் பிருந்தாதேவி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் பிருந்தாதேவி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

சில தினங்களுக்கு முன்பு சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சியில் எடப்பாடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் தர்பூசணி பழங்களில் செயற்கை ரசாயனம் செலுத்தப்படுவதாக வதந்தி பரவியது. எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் வட்டாரங்களில் தர்பூசணி பழங்கள் விற்பனை செய்து வரும் கடைகளில் எடப்பாடி வட்டாட்சியர் தலைமையில், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் சந்தியூர் விஞ்ஞானிகள், எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய குழு கள ஆய்வு மேற்கொண்டது.

ஆய்வு மேற்கொண்டதில், தர்பூசணி பழங்களின் நிறம் மற்றும் சுவைக்காக எவ்வித செயற்கை ரசாயனமும் செலுத்தப்படவில்லை என்பது முதல்கட்ட பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. தர்பூசணியில் செயற்கை ரசாயனம் செலுத்தப்படுவதாக சமூக ஊடகத்தில் தவறான வதந்திகளை பரப்பிய எடப்பாடி நகராட்சி, தாவன் தெரு பகுதியைச் சேர்ந்த சங்கீதா என்பவர் மீது காவல் துறை மூலம் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தர்பூசணி பழங்களில் செயற்கை ரசாயனம் செலுத்தப்படுவதாக சமூக ஊடகங்கள் மற்றும் தொலைகாட்சியில் பரவும் வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

எஸ்.ஐ. தேர்வு முடிவு விரைவில் வெளியீடு

தமிழக அரசு தகவல்

மதுரை

காவல் உதவி ஆய்வாளர் (எஸ்.ஐ) பணித் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று உயர் நீதிமன்றத்தில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தென்காசியைச் சேர்ந்த குருசாமி, ஆனந்தராஜா ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் எஸ்.ஐ. பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வை கடந்த ஆண்டு டிச. 21-ல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்தியது. இதில் பிரிவு- பி பாடத் திட்டத்தில் குறிப்பிட்டபடி தமிழ் வினாக்கள் இடம் பெறவில்லை. அதற்குப் பதிலாக, உளவியல் பகுதியில் இருந்து 10 வினாக்கள் கூடுதலாகக் கேட்கப்பட்டிருந்தன.

எனவே, எஸ்.ஐ. பணித் தேர்வு முடிவை வெளியிடத் தடை விதித்தும், தேர்வை ரத்து செய்து, மீண்டும் நடத்தவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில், "தமிழில் இருந்து வினாக்கள் கேட்கப்படவில்லை. இருப்பினும் தேர்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சமூகப் பிரிவுக்கான 'கட் ஆஃப்' மதிப்பெண் குறிப்பிடாமல், ஒட்டுமொத்தமாக முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன" எனக் கூறப்பட்டது.

அரசுத் தரப்பில், "தேர்வு முடிவுகளில் தவறுகள் இருந்ததால் திரும்பப் பெறப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், எஸ்.ஐ. தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி, "மனு தொடர்பாக சீருடைப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டு, விசாரணையை வரும் 12-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

சேலம் அருகே கருப்பூரில் உள்ள இஸ்கான் கோயிலில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தரிசனம் செய்து, கோயில் கட்டுமான திருப்பணிகளை பார்வையிட்டார்.

GOVERNMENT OF TAMIL NADU
TAMIL NADU SKILL DEVELOPMENT CORPORATION
EXPRESSION OF INTEREST (EoI)

EoI No. 323/SDC-NM/2026 Dated : 05.02.2026

For and on behalf of **Naan Mudhalvan**, Government of Tamil Nadu, Expression of Interest is hereby invited from Firm/Industry towards conduct of Skill based training for students pursuing Arts & Science/Engineering/Polytechnic/ITI in the state for the academic year 2026-2027.

Interested Leading Firm/Industry can download EoI document and apply for registering themselves as Industry Partners/ Training Partners/ Assessment Partners through Naan Mudhalvan Portal (**https://portal.naanmudhalvan.tn.gov.in/eoi**) from **06.02.2026 - 3.00 pm** to **23.02.2026 - 3.00 pm***.

No hardcopy or physical application would be accepted unless otherwise asked by TNSDC Naan Mudhalvan. If there are any changes / correction in the EoI document, it will be published in the Naan Mudhalvan Portal only.

TNSDC Naan Mudhalvan reserves the right to amend the existing norms as and when necessary and it will be notified in the Portal.

Sd/-
Managing Director
TAMILNADU SKILL DEVELOPMENT CORPORATION,
Nandanam, Chennai - 35

***DISCLAIMER:** (The EoI's received within the above-mentioned timeline shall be considered for the Odd Semester of 2026–27. However, we encourage our valuable partners to apply EoI throughout the year for future collaboration).

DIPR/ 765 /TENDER/2026

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண்.6360/2025/R4, நாள்: 05.02.2026

ஒப்பந்த படிவம் இனம் வாரியான விலை
இரட்டை உறை முறை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஊரக பகுதிகளில் குவாரிகளில் நேரடியாக மற்றும் மறைமுகமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் அத்தியாவசியப் பணிகளை மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதியின்கீழ் மேற்கொள்வதற்கான மின் ஒப்பந்தப்புள்ளிகள் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

1. முழுமையான விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதள முகவரியினை பார்வையிடலாம்.
2. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **www.tntenders.gov.in** என்ற இணைய தள முகவரியில் இலவசமாக **06.02.2026 முதல் 13.02.2026 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. மொத்த மதிப்பீட்டு தொகையில் 1% தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.
4. வேலைகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் தேவைப்படின், திட்ட இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.
5. **ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக முக்கியமான நாட்கள்.**
   1. முன் ஒப்பந்த கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் — **10.02.2026 – 3.00 பி.ப.**
   2. மின் ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் — **13.02.2026 – 3.00 பி.ப.**
   3. மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் — **13.02.2026 – 3.00 பி.ப.**
   4. மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் — **13.02.2026 – 4.00 பி.ப.**

செ.ம.தொ.இ/767/ஒப்பந்தப்புள்ளி/2026

இணை இயக்குநர் / திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி.

The Managing Director on behalf of
TAMIL NADU TOURISM DEVELOPMENT CORPORATION LIMITED
Notice inviting Bids for the work as detailed in table below in

" TWO BID SYSTEM" (LUMPSUM CONTRACT) e-Tender Notice Reference No.0317/Engg/Proj/ 2026 Dt: 04.02.2026

Sl. No	Name of work	Earnest Money Deposit(in Rs.)	Tender Last date	Tender Opening Date
1	TWO BID SYSTEM			
I	Development of Eco Park(Package - I) at Ooty in Nilgiris District.	Rs.11,90,000/-	19.02.2026	19.02.2026
II	Development with Tourist Infrastructures at Pykara of Nilgiris District.	Rs.17,83,000/-	19.02.2026	19.02.2026
III	Development of additional Tourist Infrastructure facilities at Poompuhar, Mayiladuthurai District	Rs.10,62,000/-	19.02.2026	19.02.2026

2	Download tender document	Through Online https://tntenders.gov.in/
3	Time/Date of receipt/ opening of bids	I) Last date and time for submission of Bid documents along with EMD upto 3.00 PM on mentioned date above. ii) Opening of bids will be on 3.30 PM on mentioned date above.
4	Address for Communications	The Managing Director, Tamil Nadu Tourism Development Corporation, No.2, Wallajah Road, Tourism Complex, Chennai Tamil Nadu - 600 002, India Website: www.ttdconline.com Email: pe.ttdc@gmail.com Phone: 044-2533 3555

DIPR/781/TENDER/2026 MANAGING DIRECTOR

சேலம் மாநகராட்சி
சூரமங்கலம் வார்டு அலுவலகம்

ந.க.எண்.கே.1/7027/2018 நாள்: 04.02.2026

பொது ஏலம் / மறு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி / மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளை ஒப்படைக்கும் நாள் முதல் பன்னிரெண்டு (12) ஆண்டுகளுக்கும், ஆண்டு தொகை இனங்களை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மறு பொது ஏலம்/ மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது. ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 24.02.2026ஆம் தேதி செவ்வாய் கிழமை அன்று முற்பகல் 11.00 மணி வரையில் அல்லது ஒத்திபோடும் நாளில் மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி / மின்னணு ஒப்பந்தப்புள்ளி (E-Tendering) இணையதளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும். அன்றை தினம் காலை 11.30 மணிக்கு வார்டு அலுவலகம் உதவி ஆணையாளர் அவர்களின் அறையில் பகிரங்க ஏலம் நடைபெறும். மேற்படி ஏலம் சம்மந்தப்பட்ட வார்டு உதவி ஆணையாளரால் நடத்தப்படும்.

ஏலத்தில் கலந்து கொள்ளவிருப்பம் உள்ளவர்கள் அட்டவணையில் கண்டுள்ள உரிம இனத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத் தொகைக்கு வங்கி வரைவோலையாக **(ஆணையாளர், சேலம் மாநகராட்சி – Commissioner, Salem City Municipal Corporation)** என்ற பெயரில் வரைவோலையினை இணைத்து ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நாள் முதல் ஏலம் நடப்பதற்கு முதல் நாளன்று 23.02.2026ஆம் தேதி திங்கட்கிழமை அன்று மாலை 04.00 மணி வரையில் அலுவலக நேரத்தில் சம்பந்தப்பட்ட வார்டு அலுவலகத்தில் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஒப்புகை / அத்தாட்சி பெற்றுக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒரைக்கம் மற்றும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேற்படி ஏலம் கோருவதற்கு ஏலதாரர்கள் / ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி அத்தாட்சி உள்ளவர்கள் மட்டுமே ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஒரு இனத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாதச் சான்று தவிர, பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மின்னணு ஒப்பந்தப்புள்ளிக்கு மற்றவர்கள் செலுத்தப்பட்ட ஏல முன்வைப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்று ஆகியவற்றை அனைத்து ஏல இனங்களுக்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி / மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுற்ற பின்னரே மற்றொரு வேலை நாளில் திருப்பிக் கொடுக்கப்படும். இதற்கு வட்டி ஏதும் கொடுக்கப்படமாட்டாது.

மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு இனத்திற்கும் பணம் செலுத்தியவர் அல்லது அவரது முறையான அனுமதி (நோட்டரி பப்ளிக் அத்தாட்சி) பெற்றவர் யாரோ ஒருவர் மட்டுமே ஏலத்தில் / ஒப்பந்தப்புள்ளி / மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் முடிந்தவுடன் அந்த இனத்திற்கு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளியை வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஏலக்கேள்வி அல்லது மின்னணு ஒப்பந்தப்புள்ளி இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அத்தொகையை உச்சகேள்வியாக எடுத்துக்கொள்ளப்படும். ஏலம் / ஒப்பந்தப்புள்ளி / மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 2025–2026ஆம் ஆண்டிற்கான ஆண்டு உரிமையாளனை இனங்களின் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஆகியவற்றிற்கு உட்பட்டதாகும். இதர விவரங்களை சம்பந்தப்பட்ட வார்டு அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

மேலும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்திருப்பவர்களாகவோ, மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை, வரி, கட்டணம் போன்றவற்றில் நிலுவை வைத்திருப்பவர்களாவோ இருத்தல் கூடாது. அவ்வாறு கண்டறியப்பட்டால் மாநகராட்சிக்கான நிலுவைத்தொகை எவ்விதத்திலும் பிடித்தம் செய்யப்படும். மேலும், கோரப்பட்ட ஏலம் தகுதி இழப்பு செய்யப்படும்.

புதிய பேருந்து நிலையம் தரைத்தளம் கடைகள் (கடை எண்.57,58,59 மற்றும் 60).

ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி

வெ.ஆ.எண்.005/செ.ம.தொ.அ/2026, சேலம்

படிவம் G

விருப்பம் தெரிவித்தலுக்கான அழைப்பு
ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் (CIRP-ன்கீழ்)
எஃகு மற்றும் எஃகு பொருட்கள் உற்பத்தி செய்கிறது
(திவால்நிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (நிறுவன நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A-ன் துணை-பிரிவு(1)-ன்கீழ்)

தொடர்புடைய விபரங்கள்

1.	நிறுவன கடன்தாரர் பெயர் அத்துடன் PAN & CIN/LLP எண்.	ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் CIN: U93090TN1995PTC039896 PAN: AABCR5529D
2.	பதிவு அலுவலகம் முகவரி	முதல் தளம், புதிய எண்.510, பழைய எண்.164, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600018.
3.	இணையதளத்தின் URL	இல்லை
4.	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	1. ரன் இந்தியா ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட், யூனிட்-1, எஸ்.எப்.எண். 265/2 E, நல்லூர் கிராமம், கவுண்டி-பாளையம் (அஞ்சல்), கந்தம்பாளையம் (வழி), பரமத்தி வேலூர் (த.கா.), நாமக்கல் (மா) - 637203. 2. ரன் இந்தியா ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட், யூனிட்-2, எஸ்.எப்.எண். 255/6A2, நல்லூர் கிராமம், கவுண்டி பாளையம் (அஞ்சல்), கந்தம்பாளையம் (வழி), பரமத்தி வேலூர் (த.கா.), நாமக்கல் (மா) - 637203.
5.	பிரதான தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	வ.எண். / தயாரிப்புகள்/சேவை / கொள்ளளவு: i Rolling Mill (TMT Bars) 54,000 MTPA; ii Melting (Ingots) 36,000 MTPA; iii Billet Production Unit 43,800 MTPA; iv Ingot Production 3,6000 MTPA
6.	இறுதி நிதியாண்டில் விற்பனையான பிரதான தயாரிப்புகள்/ சார்வீஸ்களின் அளவு மற்றும் மதிப்பு	கடந்த நிதியாண்டில் விற்கப்பட்ட முக்கிய தயாரிப்புகள்/சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு எதுவும் இல்லை.
7.	பணியாளர்கள்/வேலையாட்கள் எண்ணிக்கை	திவால்நிலை தொடக்க தேதியில் இல்லை
8.	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), உள்ளிட்ட கூடுதல் விவரங்கள், கடன்தாரர்களின் பட்டியல்கள்	விவரங்கள் Email : cirp.ranindia@gmail.com கோரிக்கை மூலம் கிடைக்கும்
9.	பிரிவு 25(2)(h) ன்கீழ் தகுதியான தீர்வு விண்ணப்பதாரர்களுக்கான தகுதி URL -ல் கிடைக்கிறது	விவரங்கள் Email : cirp.ranindia@gmail.com கோரிக்கை மூலம் கிடைக்கும்
10.	விருப்ப வெளிப்பாடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி	21.02.2026
11.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி	25.02.2026
12.	தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	02.03.2026
13.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி	04.03.2026
14.	தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான மனுதாரர்களுக்கு தீர்வுத் திட்டத்திற்கான கோரிக்கை	04.03.2026
15.	தீர்மான திட்டங்களை சமர்ப்பிப்பு கடைசி நாள்	04.04.2026
16.	விருப்ப வெளிப்பாடு சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் id	cirp.ranindia@gmail.com
17.	நிறுவன கடன்தாரரின் MSME பதிவு நிலையின் விவரங்கள்	RP -க்கு கிடைத்த தகவலின்படி பெருநிறுவனக் கடன்தாரர் ஒரு பதிவு செய்யப்பட்ட MSME ஆகும் (நடுத்தர நிறுவனம்)

நாள் : 06.02.2026
இடம் : கரூர்

ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்காக
P பாலசுப்பிரமணியன்
ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கான தீர்மான நிபுணர்
IBBI பதிவு எண். : IBBI/IPA-001/IP-P-02867/2024-2025/14404
AFA செல்லுபடியாகும் காலம் ஜூன் 30, 2027
85/3, சுக்காலியூர், கருப்பம்பாளையம் கிராமம், கரூர், தமிழ்நாடு, 639003

ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்

பொது இ-ஏல அறிவிப்பு - அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகளாகிய சொத்துகளின் விவரம்

இதனால் குறிப்பாக இவ்வங்கியில் கடன் பெற்ற கடன்தாரர்களுக்கும், பொதுவாக பொதுமக்களுக்கும் தெரிவிப்பது என்னவெனில் கீழே குறிப்பிட்டுள்ள ஆக்ஸிஸ் வங்கிக் கிளையில் அடமானம் வைக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள கணக்குகளில் உள்ள தங்க நகைகள் கீழ்கண்ட கிளைகளில் வைத்து பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளோம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் ஆக்ஸிஸ் வங்கி லிமிடெட்டில் தமது தங்க ஆபரணங்களை வங்கியிடம் அடமானம் வைத்து கீழ் குறிப்பிட்டவாறு கடன் வசதி பெற்றுள்ளனர். கடன்தாரர், உத்தரவாதமளித்தவர்களிடம், அவர்கள் பெற்ற தங்கக் கடன் வசதியின் கீழ் நிலுவையிலுள்ள தொகையை திரும்பச் செலுத்தக் கோரி கடன்தாரர்கள்/ உத்தரவாதமளித்தவர்களுக்கு கேட்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. ஆனால் கடன்தாரர்கள் / உத்தரவாதமளித்தவர்கள் நிலுவையிலுள்ள கடன்தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் வங்கி வேறுவழியின்றி நிர்ப்பந்த நிலையில் அடமானம் வைத்துள்ள தங்க நகைகளை இ–ஏலம் மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. அதிலும் குறிப்பாக கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ள தங்க நகை இனங்களை **16.02.2026 ; திங்கட்கிழமை அன்று பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணியளவில் "எங்குள்ளதோ அங்கு", "என்ன உள்ளதோ அது", "உள்ளது உள்ளவாறு", "மீளப் பெற இயலாது"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது.

கடனாளிகளின் விபரமும், நிலுவைத் தொகையும்.

வ. எண்.	கிளையின் பெயர்	கடன்தாரர்களின் பெயர்	கடன் கணக்கு எண்	நிலுவைத் தொகை ரூ.	கேட்பு அறிவிப்புத் தேதி	மொத்த எடை கிராமில்	நிகர எடை கிராமில்
1	தர்மபுரி [TN]	சண்முகவள்ளி கோபால்	XXXXXXXXXXX8423	2381959	10-01-2026	617.200	600.600
2	தர்மபுரி [TN]	மது பெருமான்	XXXXXXXXXXX4527	1775910	10-01-2026	506.300	464.800
3	தர்மபுரி [TN]	மது பெருமான்	XXXXXXXXXXX4899	1497077	10-01-2026	384.600	351.700
4	தர்மபுரி [TN]	மது பெருமான்	XXXXXXXXXXX5787	456961.75	10-01-2026	77.200	73.800
5	தர்மபுரி [TN]	சுரேஷ்குமார் சின்னசாமி	XXXXXXXXXXX2421	366072.99	10-01-2026	45.200	43.700
6	தர்மபுரி [TN]	கார்த்திகேயன் வீரராகவன்	XXXXXXXXXXX1358	189600	19-12-2025	24.000	23.800
7	காவேரிபட்டினம் [TN]	பூபதி P	XXXXXXXXXXX8629	1953058.71	10-01-2026	274.100	256.100
8	தொரப்பள்ளி அக்ரஹாரம் [TN]	வெங்கடேஷ் K	XXXXXXXXXXX3999	38289.15	10-01-2026	5.900	5.800
9	நாமக்கல் [TN]	நாச்சிமுத்து ஐய்யப்பன்	XXXXXXXXXXX2429	1194096

தாம்பரத்தில் பெரிய ஏரி, புது தாங்கல் ஏரி, எட்டி தாங்கல் ஏரி, பார்ப்பன்கால் ஏரி, புத்தேரி, அல்லேரி போன்ற நீர் நிலைகள் உள்ளன. இந்த ஏரி மூலம் பல ஆயிரம் ஏக்கர் விவசாயம் நடைபெற்றது. தற்போது நகரமயமானதால் விவசாயம் நடைபெறவில்லை. ஏரிகளும் சுருங்கிவிட்டன.

எட்டாம் நூற்றாண்டில் காஞ்சிபுரம் சிற்றாலயங்களில் ராஜசிம்ம பல்லவனின் 300-க்கும் மேற்பட்ட பட்டப் பெயர்கள் கல்வெட்டுகளாகச் செதுக்கப்பட்டுள்ளன. அந்த காலத்து அரசர்களின் வீரத்தையும், கலை ஆர்வத்தையும் பறைசாற்றும் கல்வெட்டுகளின் கருவூலமாக காஞ்சி உள்ளது.

நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் காந்தி பெயரை நீக்கியதை கண்டித்து, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் தாம்பரத்தில் பேரணி நடந்தது. (அடுத்த படம்) மாநில காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில், தெலங்கானா துணை முதல்வர் மல்லு பாட்டி விக்கிரமார்கா உள்ளிட்டோர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து பேரணி சென்றனர். படங்கள்:எம்.முத்துகணேஷ்

ரூ.13 கோடி செலவில் கோவளம் உள்ளிட்ட

11 ஊரக குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர் திட்டம்

முதல்வர் ஸ்டாலின் காணொலி மூலம் தொடங்கி வைத்தார்

கோவளம்

ரூ.13 கோடியே 62 லட்சம் செலவில் கோவளம் உள்ளிட்ட 11 ஊரக குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் காணொலி மூலம் நேற்று தொடங்கி வைத்தார்.

கோவளம் ஊராட்சி மற்றும் 10 ஊரகக் குடியிருப்பு பகுதிகளுக்கு ரூ.13 கோடியே 62 லட்சம் மதிப்பில் உயிர் நீர் இயக்கம் மற்றும் மாநில அரசு ஆகியவற்றின் பங்களிப்புடன் கூட்டு குடிநீர் திட்டம் கடந்த 2022-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதற்காக புதுப்பாக்கம் கிராமத்தில் 5 திறந்தவெளி கிணறுகள் அமைக்கப்பட்டு அங்கிருந்து 10 கிமீ தூரத்துக்கு குழாய்கள் புதைக்கப்பட்டு கோவளம் நீர்த்தேக்க தொட்டிக்கு கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்துக்காக ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்த ஒரு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டியுடன் புதியதாக ஒரு தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் கோவளம் ஊராட்சி மற்றும் திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய 10 ஊரகக் குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் 12 ஆயிரம் பேர் பயன் பெறுவர்.

இத்திட்டத்தை தலைமைச் செயலகத்தில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். கோவளத்தில் நடைபெற்ற இதற்கான விழாவில் செங்கை ஆட்சியர் சினேகா புதியதிட்டத்தின் கல்வெட்டை திறந்து வைத்து குடிநீர் விநியோகத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திருப்போரூர் வட்டாட்சியர் சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலைச்செல்வன், அரி பாஸ்கர் ராவ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேமலதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

காலநிலை மாற்றம் பொது சுகாதாரத்துக்கான அச்சுறுத்தல்

நீதிபதி புஷ்பா சத்தியநாராயணா கருத்து

சென்னை

காலநிலை மாற்றம் மற்றும் அதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் தொடர்பான சர்வதேச மாநாடு சென்னை எஸ்ஆர்எம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது.

காமன்வெல்த் மெடிக்கல் அசோசியேஷன் (CMA), இந்திய மருத்துவ சங்க தமிழ்நாடு கிளை சார்பில், "காலநிலை மாற்றத் தணிப்பு – சுகாதாரத் துறை பார்வை" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த சுகாதாரத் தலைவர்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிலைத்தன்மை நிபுணர்கள் பங்கேற்றனர்.

முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நீதித்துறை உறுப்பினரும், நீதிபதியுமான புஷ்பா சத்தியநாராயணா பேசியதாவது:

காலநிலை மாற்றம் பொது சுகாதாரத்துக்கான நேரடியான அச்சுறுத்தலாக உள்ளது. சுகாதார நிறுவனங்கள் பொறுப்புணர்வு, ஒழுங்குமுறை ஆளுமை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். இத்தகைய மாநாடுகள், கொள்கைகளை நடைமுறை நடவடிக்கைகளாக மாற்ற உதவுகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

சென்னை எஸ்ஆர்எம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற 'காலநிலை மாற்றத் தணிப்பு – சுகாதாரத் துறை பார்வை' என்ற சர்வதேச மாநாட்டின்போது மாநாட்டு அறிக்கையை வெளியிட்ட முக்கிய விருந்தினர்கள் மற்றும் சுகாதாரத் துறை நிபுணர்கள்.

எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணை துணைவேந்தர் (மருத்துவ மற்றும் சுகாதார அறிவியல் பிரிவு) டாக்டர் நிதின் எம்.நாகர்கர் பேசும்போது, "காலநிலை மாற்றத்தின் உண்மைகளைப் பொருட்படுத்தாமல், சுகாதாரக் கல்வியை வடிவமைக்க முடியாது. எதிர்கால சுகாதாரத் தலைவர்களை உருவாக்க, நிலைத்தன்மையை கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் மருத்துவப் பயிற்சிகளில் ஒருங்கிணைப்பு" என்றார்.

ஆராய்ச்சி மைய டீன் (மருத்துவம்) டாக்டர் ஜெயந்தி பேசும்போது, "காலநிலை மாற்றம் மருத்துவ மனைகளின் தினசரி செயல்பாடுகளை நேரடியாகப் பாதிக்கிறது. நோயாளி பராமரிப்பிலிருந்து நிர்வாகம் வரை பல நிலைகளில் தாக்கம் உள்ளது. இந்த மாநாடு, சிகிச்சை தரத்தை மேம்படுத்தியபடி, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் நடைமுறைத் தீர்வுகளை பகிர்ந்து கொள்ள உதவும்" என்றார்.

தொடர்ந்து, பசுமை மருத்துவ மனை நடைமுறைகள், காலநிலைச் சீரமைக்கப்பட்ட கட்டமைப்பு, ஆளுமை, தலைமைத்துவம் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் குறித்த விவாதங்கள் மற்றும் அமர்வுகள் நடைபெற்றன.

காலநிலைக்கு தாங்கும் திறன் கொண்ட, நிலைத்தன்மை வாய்ந்த சுகாதார அமைப்புகளை உருவாக்கும் நோக்குடன், கூட்டு கொள்கை உறுதிமொழி ஏற்கப்பட்டு, தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் நடைமுறை நடவடிக்கைகளுக்கான அழைப்புடன் மாநாடு நிறைவடைந்தது.

ஜெனரேட்டிவ் ஏஐ திறன்களை வழங்க

சவீதா கல்லூரியில் 'ஏஐ அசெண்ட்' நிகழ்வு

சென்னை

சவீதா பொறியியல் கல்லூரி, கைண்ட்ரில் நிறுவனத்துடன் இணைந்து அமேசான் வெப் சர்வீசஸ் ஆதரவுடன் 'ஏஐ அசெண்ட்' என்ற நிகழ்வை நடத்துகிறது. இந்த நிகழ்வின் கற்றல் பாதைகள் கடந்த ஜனவரி 30 அன்று அறிவிக்கப்பட்டன. இதில் பல்வேறு கல்லூரிகளின் பிரதிநிதிகள் இணைய வழியாக கலந்து கொண்டனர்.

இந்த கூட்டுத் திட்டம் கைண்ட்ரில் நிறுவனத்தின் இயக்குநர் சி.ராஜ் மோஹனால் முன்னெடுக்கப்பட்டு, சவீதா பொறியியல் கல்லூரி முதல்வர் வி.விஜய சாமுண்டீஸ்வரி தலைமையில் செயல்படுகிறது. மேலும் ஏடபிள்யுஎஸ் ஃபியூச்சர் பில்டர்ஸ் திட்டம் - தெற்கு ஆசியாவின் வணிக வளர்ச்சி தலைவர் பிரதிபா சிங் ஆதரவளிக்கிறார்.

இந்த ஏஐ முயற்சி தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மாணவர்களுக்கு ஜெனரேட்டிவ் ஏஐ மற்றும் அஜென்டிக் ஏஐ போன்ற மேம்பட்ட திறன்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பேராசிரியர்கள், முதல்வர்கள் மற்றும் துணைவேந்தர்களுக்காக கட்டமைக்கப்பட்ட திறன் மேம்பாட்டு மற்றும் தலைமையுரிமை மையப்படுத்திய ஏஐ பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இந்த கற்றல் பாதைகள் தற்போது அனைத்து துறைகளிலிருந்தும் மாணவர்களுக்கு திறக்கப்பட்டுள்ளன. பாடநெறிகளை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்கு டிஜிட்டல் திறன் பதக்கங்கள் வழங்கப்படும். சவீதா பொறியியல் கல்லூரி இதன் புரவலர் நிறுவனமாக செயல்படும்.

சவீதா பொறியியல் கல்லூரி வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

ஆட்சியர் அலுவலகம் முன்பு மறியல்

செங்கல்பட்டு

ஆட்சியர் அலுவலகம் அருகே அங்கன்வாடி பணியாளர்கள் 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி 3-வது நாளாக வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் 700-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற நிலையில் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், கோடை காலத்தில் பள்ளி மாணவர்களுக்கு விடுவது போல் மே மாதத்தில் (ஒரு மாதம்) விடுமுறை அளிக்க வேண்டும், மகப்பேறு காலத்தில் 6 மாதமாக இருக்கும் விடுமுறையை ஒரு வருடமாக நீட்டிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இந்நிலையில் அங்கன்வாடி பணியாளர்கள் ஆட்சியர் அலுவலகம் வரை பேரணியாக வந்து திடீரென மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியலில் ஈடுபட்டவர்களை செங்கல்பட்டு தாலுகா போலீஸார் கைது செய்து வாகனங்களில் ஏற்றிச் சென்று தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

இந்நிலையில் சுமார் 15-க்கும் மேற்பட்ட அங்கன்வாடி ஊழியர்களை வாகனங்களில் ஏற்ற இடமில்லை என தெரிவித்து, "ஆட்சியர் அலுவலகம் நுழைவாயிலில் நில்லுங்கள் வண்டி வரும் ஏறி வாருங்கள்" என சொல்லிவிட்டு போலீஸார் சென்று விட்டனர். நீண்ட நேரம் ஆகியும் காவல்துறை வாகனம் வராதால் அவர்கள் நுழைவு வாயிலில் அமர்ந்து தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி தர்ணாவில் ஈடுபட்டனர்.

ஆன்லைன் பட்டா வழங்க கோரி மெழுகுவத்தி ஏந்தி போராட்டம்

சோழிங்கநல்லூர்

ஆன்லைன் பட்டா வழங்க கோரி மெழுகுவத்தி ஏந்தி சோழிங்கநல்லூரில் நேற்று போராட்டம் நடைபெற்றது.

சோழிங்கநல்லூர் வட்டம் செம்மஞ்சேரி வில்லேஜ் சர்வே எண்: 394, 395-ல், ஜவகர் நகர், எழில்முக நகரில், 2002-ம் ஆண்டு முதல், 200-க்கும் மேற்பட்ட குடும்பங்கள், 20 ஆண்டுக்கு மேலாக வசிக்கின்றனர்.

இதில், 56 பேருக்கு, 2012-ல் கையால் எழுதிய பட்டா வழங்கப்பட்டு உள்ளது. அனைவருக்கும் ஆன்லைன் பட்டா வழங்க கோரி, பகுதிமக்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு, அதே பகுதியில் மெழுகுவத்தி ஏந்தி போராட்டம் நடத்தினர். போலீஸார் வாட்டாட்சியரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியதையடுத்து கலைந்து சென்றனர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் கூறியதாவது: சோழிங்கநல்லூர் வட்டத்தில் பல்வேறு பகுதியில் அரசு இடங்களில் வசித்த 600-க்கும் மேற்பட்டோருக்கு ஆன்லைன் பட்டா வழங்கப்பட்டது. எங்கள் பகுதியை வருவாய்த் துறை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. ஆட்சியர் உத்தரவிட்டும் தாசில்தார் நடவடிக்கை எடுக்கவில்லை. கேட்டால் முறையான பதிலும் கூறுவதில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

பரபரப்புகளை அனுப்புவோர் பிறரி லெடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

பிராந்திய அலுவலகம்,
சென்னை ஊரகப் மண்டலம், பிராந்திய அலுவலகம் முதல் தளம் 123, துகர் டவர்ஸ், ஆர்.எல். சாலை, எழும்பூர் - 600 008

வங்கி கிளைகள் தொடங்குவதற்கு புதிய இடம் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் வங்கி கிளைகள் தொடங்குவதற்கு தரைதளம் மற்றும் முதல் தளத்தில் உள்ள இடம் வாடகை / லீஸ் அடிப்படையில் வளாகம் அனைத்து அம்சங்களிலும் உடைமைக்கு தயாராக இருக்க கூடிய இடம் தேவை.

வ. எண்	கிளையின் பெயர்	தோராயமான இடத்தின் அளவு
1.	திருப்போரூர்	1200-1530 ச.அடி
2.	துரைப்பாக்கம்	1200-1530 ச.அடி
3.	பையனூர்	1000-1330 ச.அடி
4.	ராமஞ்சேரி	1000-1330 ச.அடி

விவரங்களுக்கு, எங்கள் வலைத்தளமான www.bankofbaroda.bank.in இன் டெண்டர் பிரிவில் உள்நுழையவும் அல்லது +91 9600137161 என்ற எண்ணில் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: 20.02.2026. பிற்பகல் 3 மணி.
தேதி : 06.02.2026 பிராந்தியத் மேலாளர்

இண்டியன் பேங்க் Indian Bank
இன்வெஸ்டார் சர்வீசஸ் செல், கார்ப்பொரேட் அலுவலகம், 254-260, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014

பொது அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பங்குப் பத்திரம்(கள்) தொலைந்து அல்லது தவற விடப்பட்டு அல்லது திருடப்பட்டிருப்பதாகவும் அந்த பங்குப் பத்திரங்களில் பதியப்பட்ட உரிமையாளர்கள் அந்த பத்திரங்களுக்கு பதிலாக நகல் பங்குப் பத்திரம்(கள்) வழங்குமாறு வங்கியிடம் விண்ணப்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	பங்குதாரரின் பெயர்	ஃபோலியோ எண்	பங்குகளின் எண்ணிக்கை	பத்திர எண்	தனித்துவமான எண்	
					இருந்து	வரை
1.	பிரநெஸ்பிரிதி மன்டல்	00017394	23	17409	609048638	609048660
2.	ஷியோ குமார் (ஷிவ் குமார் ஜெய்ஸ்வால்)	00041351	207	41366	610161558	610161764
3.	ஜனார்தன் பேனர்ஜி	00012121	11	12136	608971678	608971688
4.	ரோஷன் குமார் சா	00027042	34	27057	609356392	609356425
5.	அருண் பரன் மித்ரா JT: அஷிட் பரன் மித்ரா	00010785	11	10800	608956982	608956992
6.	சிதேஷ் சந்திரா பேனர்ஜி (இறந்தவர்) JT: ஷியாமா பிரசாத் பேனர்ஜி	00039210	69	39225	609988820	609988888
7.	பிரபாகர் A S	00027804	34	27819	609382094	609382127
8.	துர்கா ராவ் V	24472	34	24487	609269132	609269165
9	சாபித்ரி தேவி (சாவித்ரி தேவி)	00038167	69	38182	609917235	609917303
10.	உமா நாராயணன் Jt1: நாராயணன்	00000187	11	202	608801395	608801405
11.	முகமது அஷ்ரத்	00036927	57	36942	609836884	609836940
12.	முகமது அன்வர்	00036928	57	36943	609836941	609856997
13.	உஸ்மா பெர்வீன் (உஸ்மா பர்வீன்)	00029868	46	29883	609465297	609465342
14.	நாக ராஜேந்திர குமார் ரெட்டி K	00028438	34	28453	609403581	609403614
15.	சுதிர் குமார் ஜெயின்	00034955	57	34970	609724662	609724718
16.	ராஜேந்திர பிரசாத் கனோஜியா	00022081	34	22096	609188056	609188089

மேற்கூறிய பங்குப் பத்திரம்(கள்) சம்பந்தமாக யாருக்கேனும் ஏதேனும் உரிமை கோருவதாக இருப்பின் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்றம் செய்யும் ஏஜென்ட்டிடம், அதாவது **கேமியோ கார்பொரேட் சர்வீஸஸ் லிமிடெட்,** மின்னஞ்சல்: investor@cameoindia.com என்ற முகவரியில் உரிமைகோர வேண்டும். இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்கு மேல் வரும் எந்த உரிமை கோரலும் அனுமதிக்கப்பட மாட்டாது. பதிவாளர் நகல் சான்றிதழ்(கள்) வழங்கத் தொடர்வார்.

இந்தியன் வங்கி

இடம் : சென்னை தினா நாத் குமார்
தேதி : 05.02.2026 உதவி பொது மேலாளர் & நிறுவனச் செயலாளர்

பொது அறிவிப்பு

இதனால் பொது மக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் M/s. பாங்க் ஆஃப் பரோடா, மவுண்ட் ரோடு கிளை திரு. ஜி.சரவணகுமார் மற்றும் திருமதி ஆர். திவ்யா ஆகியோரின் பெயரில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் பேரில் கடன் வழங்க உத்தேசித்துள்ளது.

சொத்து விவரம்

அசையா சொத்து விவரம் : திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுகா, செம்பரம்பாக்கம் கிராமம் எண். 65 ன் நிலம் மற்றும் கட்டிடம் அதன் ச.எண்கள் மற்றும் அளவுகள் பின்வருமாறு.

வ. எண்கள்	சர்வே எண்கள்	பரப்பளவு ஏக்கரில்	வ. எண்கள்	சர்வே எண்கள்	பரப்பளவு ஏக்கரில்
1.	121/2A2	0.03	8.	121/8	0.09
2.	121/2B	0.20	9.	121/13A2	0.04
3.	121/5	0.16	10.	121/9	0.31
4.	121/4	0.04	11.	121/13B2	0.06
5.	121/6B	0.06	12.	121/17	0.19
6.	121/13C2A1	0.03	13.	123/1A	0.98
7.	121/7B	0.10		Total	2.29

ஆக மொத்தம் 2 ஏக்கர் 29 சென்ட் அதற்கு இணையாக உள்ள நிலங்கள் பட்டா எண்கள் 501 முதல் 1169ல் அடங்கும். அதனுடன் கட்டிடம், மதில் சுவர் அதன் பொருந்துகள் மற்றும் வசதிகள் அதனுடன் மின்இணைப்பு அதன் வைப்புத்தொகை மற்றும் இதரவை. இச்சொத்து திருவள்ளூர் பதிவு மாவட்டம் பூந்தமல்லி சார்பதிவு மாவட்டத்தில் உள்ளது.

எந்தவொரு நபருக்கும்/வங்கிக்கும்/நிதி நிறுவனத்திற்கும் இதற்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் அத்தகைய ஆட்சேபனைக்கான தேவையான ஆதாரத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கியைத் தொடர்பு கொள்ளலாம், அவ்வாறு செய்யத் தவறினால், பட்டியலிடப்பட்ட சொத்தின் மீது மூன்றாம் தரப்பினரின் உரிமைகோரல், வட்டி கட்டணம் எதுவும் இல்லை என்று கருதப்படும், சொத்து எந்தவொரு கட்டணம் / உரிமைகோரல் / சுமையிலிருந்தும் விடுபட்டதாகக் கருதப்படுகிறது, மேலும் வங்கி அடமானத்தைத் தொடரும்.

தேதி : 04.02.2026 **பாங்க் ஆஃப் பரோடா**
சென்னை மவுண்ட் ரோடு கிளை,
தொலைபேசி : 044/23454278/279/280

படிவம் G

விருப்பம் தெரிவித்தலுக்கான அழைப்பு

ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் (CIRP-ன்கீழ்)

எஃகு மற்றும் எஃகு பொருட்கள் உற்பத்தி செய்கிறது

(திவால்நிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (நிறுவன நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A-ன துணை-பிரிவு(1)-ன்கீழ்)

தொடர்புடைய விபரங்கள்

1.	நிறுவன கடன்தாரர் பெயர் அத்துடன் PAN & CIN/LLP எண்.	**ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்** **CIN: U93090TN1995PTC039896** **PAN: AABCR5529D**
2.	பதிவு அலுவலகம் முகவரி	முதல் தளம், புதிய எண்.510, பழைய எண்.164, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600018.
3.	இணையதளத்தின் URL	இல்லை
4.	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	**1. ரன் இந்தியா ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட், யூனிட்-1,** எஸ்.எப்.எண். 265/2 E, நல்லூர் கிராமம், கவுண்டிபாளையம் (அஞ்சல்), கந்தம்பாளையம் (வழி), பரமத்தி வேலூர் (த.கா.), நாமக்கல் (மா) - 637203. **2. ரன் இந்தியா ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட், யூனிட்-2,** எஸ்.எப்.எண். 255/6A2, நல்லூர் கிராமம், கவுண்டிபாளையம் (அஞ்சல்), கந்தம்பாளையம் (வழி), பரமத்தி வேலூர் (த.கா.), நாமக்கல் (மா) - 637203.
5.	பிரதான தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	வ.எண். / தயாரிப்புகள்/சேவை / கொள்ளளவு i Rolling Mill (TMT Bars) 54,000 MTPA ii Melting (Ingots) 36,000 MTPA iii Billet Production Unit 43,800 MTPA iv Ingot Production 3,6000 MTPA
6.	இறுதி நிதியாண்டில் விற்பனையான பிரதான தயாரிப்புகள்/ சர்வீஸ்களின் அளவு மற்றும் மதிப்பு	கடந்த நிதியாண்டில் விற்கப்பட்ட முக்கிய தயாரிப்புகள்/சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு எதுவும் இல்லை.
7.	பணியாளர்கள்/வேலையாட்கள் எண்ணிக்கை	திவால்நிலை தொடக்க தேதியில் இல்லை
8.	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (ஆட்டவணைகளுடன்), உள்ளிட்ட கூடுதல் விவரங்கள், கடன்தாரர்களின் பட்டியல்கள்	விவரங்கள் Email : cirp.ranindia@gmail.com கோரிக்கை மூலம் கிடைக்கும்
9.	பிரிவு 25(2)(h) ன்கீழ் தகுதியான தீர்வு விண்ணப்பதாரர்களுக்கான தகுதி URL -ல் கிடைக்கிறது	விவரங்கள் Email : cirp.ranindia@gmail.com கோரிக்கை மூலம் கிடைக்கும்
10.	விருப்ப வெளிப்பாடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி	21.02.2026
11.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி	25.02.2026
12.	தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	02.03.2026
13.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி	04.03.2026
14.	தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான மனுதாரர்களுக்கு தீர்வுத் திட்டத்திற்கான கோரிக்கை	04.03.2026
15.	தீர்மான திட்டங்களை சமர்ப்பிப்பு கடைசி நாள்	04.04.2026
16.	விருப்ப வெளிப்பாடு சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் id	cirp.ranindia@gmail.com
17.	நிறுவன கடன்தாரரின் MSME பதிவு நிலையின் விவரங்கள்	RP -க்கு கிடைத்த தகவலின்படி பெருநிறுவனக் கடன்தாரர் ஒரு பதிவு செய்யப்பட்ட MSME ஆகும் (நடுத்தர நிறுவனம்)

நாள் : 06.02.2026 **ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்காக**
இடம் : கரூர் **P பாலசுப்பிரமணியன்**
ரன் இந்தியா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கான தீர்மான நிபுணர்
IBBI பதிவு எண். : IBBI/IPA-001/IP-P-02867/2024-2025/14404
AFA செல்லுபடியாகும் காலம் ஜுன் 30, 2027
85/3, சுக்காலியூர், கருப்பம்பாளையம் கிராமம், கரூர், தமிழ்நாடு, 639003

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

அஜித்குமார் R (AJITHKUMAR R), திருமதி. மாலா அவர்களின் மகன், எண். 60, வெங்கடேஸ்வரா நகர், ஸ்ரீநிவாசபுரம், அய்யப்பன்தாங்கல், காஞ்சிபுரம், தமிழ்நாடு – 600056 இல் வசிக்கும் நான், எனது பெயரை அஜித் குமார் (AJITH KUMAR) என்று மாற்றிவிட்டேன். AFFIDAVIT DT: 02-02-2026 AT CHENNAI.

I, A.B. Selvakumar ,S/O; Balakrishnan , R/O : NO.18, Waminathapuram,2nd Cross Street, Vadhabi Nagar, Vengaivasal, Chennai - 600126. Have changed my name as A.B.Jeevan.

I, Susan Mary, W/O Gopinath Ponnan, residing at Plot no 20, Vigneshwar nagar, Bethesda st, Gerugambakkam, Chennai 600122, declare that my name is wrongly mentioned in my husband's passport as Suson and my correct name is Susan Mary as per Affidavit No. ET389399 dated 04/02/2026.

I, Kuppuswamy Ramanathan Ramaswami, son of Ramanathan, residing at G2 DAC Nandavanam, 47 Agasthiyar street, East Tambaram, Chennai-59. shall henceforth be known as Kakacheri Ramanathan Ramaswami for all official purposes. - Kuppuswamy Ramanathan Ramaswami

I, Rajaramnath Ramaswami, son of K. R. Ramaswami, residing at G2 DAC Nandavanam, 47 Agasthiyar street, East Tambaram, Chennai-59. shall henceforth be known as Rajaramnath for all official purposes. - Rajaramnath Ramaswami

ஆட்கள் தேவை

மார்கெட்டிங்

MNC looking for Field Sales Executives for Coimbatore office. Salary PF Incentives. Contact 7558998946

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CH-KP